முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 01.04.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 01.04.2026 | சாட்சி | பி.வா.சா. 3 |
| பெயர். | அன்பழகன் | வயது.. | 69 |
| தந்தை பெயர். | ராமசாமி | ஊர்.. | பெரியமேடு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. நான் M.Com படித்துள்ளேன், விவசாயம் பார்க்கிறேன். முதல் விசாரணையில் பாலகிருஷ்ணனுக்கு 6 வது இன சொத்தில் 68 சென்டில் 38 சென்ட் கிடைத்ததாக கூறியிருக்கிறேன் என்றாலும் அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் பாலகிருஷ்ணனுக்கு தந்தை மூலமாக கிடைக்கபெற்ற சொத்து ஆகும், பாலகிருஷ்ணன் தந்தை பெயர் கோவிந்தசாமி. பாலகிருஷ்ணன் 6 வது இன சொத்தை அனுபவித்து வந்தது எனக்கு தெரியாது, மேற்சொன்ன 6 வது இன சொத்தில் இருக்கும் பாக்கி 30 சென்ட் சொத்து நாராயணசாமிக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்று நேரடியாக எனக்கு தெரியாது. நாராயணசாமிக்கும் மொத்தம் எத்தனை வாரிசு என்றால் நாராயணசாமி மகன் பிச்சமுத்துவை மட்டும் தான் தெரியும். வா.சா-ஆ.1 ஜெகதாம்மாள் தனது மருமகளுக்கு செனடில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான் ஆனால் அது செல்லதக்கது அல்ல.

2. பாலகிருஷ்ணன் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வதற்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா-ஆ.1, பாலகிருஷ்ணன் உள்ளிட்ட நபர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் மேற்சொன்ன செட்டில்மெண்ட் பத்திரம் செல்லதக்கதுஅல்ல. வா.சா-ஆ.1 நிலுவையில் இருக்கும் நான் 30 செண்ட் கிரயம் வாங்கியதாக சொல்வதும், நான் பின்னிட்டு 8 ம் பிரதிவாதிக்கும் கிரயம் கொடுத்ததும் சட்டப்படி செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா-ஆ.1, நிலுவையில் இருக்கும் போது அதை குறிப்பிட்டு

சொத்துக்கள் பொறுத்து Transaction செய்வதற்கு சட்டப்படி இடமில்லை என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.